# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

## Spl.C.C.No. 8/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.9

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பாலசுப்பிரமணியன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 04th day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது நல்லமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் 2012ம் ஆண்டில் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் 3வது வார்டு உறுப்பினராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரி அந்த காலகட்டத்தில் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து தலைவராக பணியில் இருந்தார். நான் வார்டு உறுப்பினர் என்ற முறையில் பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் கலந்து கொள்வேன்.

கடந்த 18.07.2012ம் தேதி அன்று நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் நான் கலந்து கொண்டு அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் நான் 3வது வார்டு உறுப்பினர் P.பாலசுப்பிரமணியன் என்று நான் கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் குற்ற இறுதியறிக்கையுடன் அரசு தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண எண் 14ல் பக்கம் 42ல் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ 15** ஆகும்.

அந்த தீர்மானத்தின்படி வழக்கின் புகார்தாரரான மாரியம்மாள், க.பெ.ராஜ்குமார் என்பவரின் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 பயனாளிகளில் இடம்பெறவில்லை. இந்த வழக்கின் புகார்தாரர் மாரியம்மாள் அவர்களுக்கு பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு வழங்குவது சம்பந்தமாக லஞ்சம் கேட்டு பெற்றதாக ஆஜர் எதிரி கைது செய்யப்பட்டார் என்று நான் தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

18.07.2012 ல் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கலந்து கொண்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி லஞ்சம் வாங்கியது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் போலிசார் சொல்லி தெரியும்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.